**செப்டம்பர் – 22**

# TNPSC துளிகள்

- பிரதமர் புதுதில்லியில் துவாரகா எனுமிடத்தில் சர்வதேச இந்திய சமூகநலக் கூடம் மற்றும் கண்காட்சி மையத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். இம்மன்றம் கட்டி முடிக்கப்படும் போது, இந்தியாவில் மிகப்பெரிய உள்ளரங்க கண்காட்சி மைதானமாகவும், உலகின் முதல் 10 பெரிய இடங்களில் ஒன்றாக இருக்கும் எனவும் கூறப்படுகின்றது.
- புகழ்பெற்ற விஞ்ஞானியான கமலேஷ் நீல்காந்த் வியாஸ் அணுசக்தி கழகத்தின் தலைவராகவும் அணுசக்தி துறையின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போதைய பாபா அணுஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராக இருக்கும் வியாஸ், சேகர் பாசு என்பவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- அரசிற்கு சொந்தமான இந்திய அஞ்சலக பணவழங்கீட்டு வங்கியும், தனியார் ஆயுள் காப்பீட்டு நிறுவனமான பஜாஜ் அலையன்ஸ் ஆயுள் காப்பீட்டு நிறுவனமும், நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் அவர்கள் வீட்டிற்கே சென்று ஆயுள் காப்பீட்டிற்கான வசதிகளை ஏற்படுத்தி தருவதற்காக ஒரு யுக்திசார் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- FIFA சர்வதேச கால்பந்து அணிகளுக்கான தரவரிசை வரலாற்றில் முதல்முறையாக இரு அணிகள் முதலிடத்தைப் பகிர்ந்துள்ளன. அவர்கள் உலக கோப்பை வெற்றியாளர் பிரான்சும் 2018 உலக கோப்பையின் அரை இறுதிப் போட்டியாளர் பெல்ஜியமும் ஆவர்.
- புகழ்பெற்ற இந்திய டென்னிஸ் வீரரான விஜய் அமிர்தராஜ் தமிழ்நாடு டென்னிஸ் சங்கத்தின் தலைவராக, சென்னையில் நடந்த அதன் பொதுக் குழுக் கூட்டத்தில் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். 2012ம் ஆண்டு வரையில் 3 வருட காலத்திற்கு அவரது பணிக்காலம் இருக்கும். கடந்த 9 வருடங்களாக பதவியிலிருக்கும் M.A. அழகப்பன் என்பவருக்குப் பதிலாக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- குஜராத்தின் அம்ரேலி மாவட்டத்தில் கிர் காடுகளில் உள்ள தால்கனியா வரம்பில் ஒரு வார காலத்திற்குள்ளாக ஏறக்குறைய 11 சிங்கங்கள் இறந்துள்ளன. 2015 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி கிர் காடுகள் 520 சிங்கங்களுக்கான புகலிடமாகும்.
- மத்திய போக்குவரத்துத் துறை அமைச்சர் மும்பையில் பிரியதர்சினி உலகளாவிய நிறுவன விருதின் 34வது ஆண்டுவிழாவின் போது பாலிவுட் நடிகை அனுஷ்கா சர்மாவிற்கு சிறந்த நடிகருக்கான ஸ்மிதா படீல் விருது வழங்கி கௌரவித்தார்.
- டெல்லியின் நிதி ஆணையரான அனிந்தோ மஜும்தார் மத்திய ஊழல் தடுப்பு ஆணையத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## அடல் பிமித் வியக்தி கல்யாண் யோஜனா

- அரசு தொழிலாளர் காப்பீட்டு நிறுவனம் (Employee State Insurance) அடல் பிமித் வியக்தி கல்யாண் யோஜனா என்ற திட்டத்தை 1948 ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கான அரசு காப்பீட்டுச் சட்டத்தின் கீழ் காப்பீடு பெற்ற நபர்களுக்காக அங்கீகரித்துள்ளது.
- இத்திட்டம் தொழிலாளர்களின் வேலை வாய்ப்பின்மையின் போதும், அவர்கள் எப்பொழுது புதிய வேலையை தேடுகிறார்களோ அப்பொழுதும் அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக உதவித்தொகையை செலுத்தும் ஒரு வசதியாகும்.

## பாலியல் குற்றவாளிகள் மீதான தேசிய தரவுதளம்

- மத்திய உள்துறை அமைச்சகம் இந்தியாவின் பாலியல் குற்றவாளிகள் மீதான தேசிய தரவுதளத்தை நிறுவியிருக்கின்றது.
- இதன்மூலம் இவ்வாறான தரவுதளத்தை நிறுவியதில் உலகில் 9வது நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.

**Tightening the grip**

A lowdown on the National Sex Offenders Registry, which is aimed at curbing crimes against women and children

**Who will maintain the database?**
The National Crime Records Bureau will store the data. It can be accessed only by the law enforcement agencies and will be out of bounds for the general public

**Which other countries have similar database?**
The U.S., the U.K., Canada, Australia, Ireland, New Zealand, South Africa, and Trinidad & Tobago

**What are the details stored with the registry?**
Name, address, photograph and fingerprint details of those convicted in sexual assault cases

**How long will the data be stored by the NCRB?**
Will be stored for 15 years for those posing low danger, 25 years for those posing moderate danger, and lifetime for habitual offenders involved in violent crimes like gang-rapes

**How many entries have been made so far?**
4.4 lakh entries of convicts from year 2005 have been included in the registry till date

- இது பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான குற்றங்களை தடுக்கும் நோக்கில் தேசிய பெண்கள் பாதுகாப்பிற்கான திட்டத்தின் ஒரு பூர்வாங்க முயற்சியாகும்.
- இத்தரவுதளம் தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தால் பராமரிக்கப்படும். மாநில காவல்துறை 2005ம் ஆண்டு முதல் சீராக இத்தரவுதளத்தை புதுப்பிக்கும்.

## Aviaindra 18

- 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 முதல் 28 வரை ரஷ்யாவின் லிபிட்ஸ்க் நகரில் இந்திய ரஷ்ய விமானப்படை கூட்டுப்பயிற்சியான Aviaindra 18 என்ற பயிற்சி நடத்தப்பட்டது.
- 2018-ம் ஆண்டின் டிசம்பர் மாதம் 10 முதல் 22ம் தேதி வரை Aviaindra - 18 என்ற பயிற்சியின் 2வது பதிப்பு ராஜஸ்தான் ஜோத்பூரில் நடத்தப்படும்.
- Aviaindra 18 பயிற்சி என்பது இந்திய மற்றும் ரஷ்ய படைகளுக்கான விமானப் படைப் பயிற்சியாகும்.
- இப்பயிற்சியின் நோக்கம் இருதரப்பு நாடுகளின் கண்ணோட்டத்தில் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கையை நோக்கிய வண்ணம் நடத்தப்படுவதாகும்.
- 2014 ஆம் ஆண்டு முதல் முறையாக இது நடத்தப்பட்டது. அப்போதிலிருந்து இரு நாடுகளிலும் இப்பயிற்சி ஆண்டிற்கு இருமுறை நடத்தப்படுகின்றது.

## MSME இன்சைடர் (Insider)

- மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான அமைச்சகம் தனது மாதாந்திர மின்னணு செய்திப் பத்திரிக்கையாக MSME Insider என்பதை வெளியிட்டு இருக்கின்றது.
- இந்த மின்னணுப் பத்திரிக்கை MSME (Micro, Small and Medium Enterprises) அமைச்சகம் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை வெளியிடும். மேலும் இது அமைச்சகத்திற்கும் முக்கிய பங்குதாரர்களுக்கும் பாலமாக செயல்படும்.

# சர்வதேசச் செய்திகள்

## CPEC - சவுதி அரேபியா

- பாகிஸ்தான் 50 பில்லியன் டாலர் அளவிற்கு மதிப்புடைய சீனா-பாகிஸ்தான் பொருளாதார பெருவழிப்பாதையில் மூன்றாவது யுக்திசார் பங்குதாரராக இணைய சவுதி அரேபியாவிற்கு அழைப்பு விடுத்திருக்கின்றது.
- பாகிஸ்தானின் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டபின் இம்ரான் கான் தான் மேற்கொண்ட முதல் அலுவலக வெளிநாட்டுப் பயணமாக சவுதி அரேபியாவிற்கு சென்று வந்ததற்குப் பிறகு இது குறித்த முறைப்படியான அறிவிப்பு வெளியிடப்பட்டது.
- இந்த CPEC (China Pakistan Economic Corridor) பெருவழிப்பாதையில் பங்குதாரராக இணைவதற்கு பாகிஸ்தான் அழைப்பு விடுத்த முதல் நாடு சவுதி அரேபியா ஆகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## அவசர தீர்வுகளுக்கான ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு அறை

- மத்திய உள்துறை அமைச்சகம் அவசர தீர்வுகளுக்கான ஒரு அதிநவீன ஒருங்கிணைப்பு கட்டுப்பாட்டு அறையை ஏற்படுத்த இஸ்ரோவுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு இருக்கின்றது.
- இந்த அறை உள்நாட்டு பாதுகாப்பிற்கும் பேரிடர் மேலாண்மைக்கும் தேவைப்படும் வசதிகளை ஏற்படுத்தும்.

## இஸ்ரோ தொழில்நுட்ப மேம்பாட்டு மையம்

- திரிபுராவின் முதல்வர் இஸ்ரோவின் முதல் விண்வெளி தொழில்நுட்ப மேம்பாட்டு மையத்தை பெங்களூருவிலிருந்து தொலைதூர வசதி மூலம் செயல்படும் வகையில் அகர்தலாவில் உள்ள தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தில் நிறுவினார்.
- இந்திய மின்னணுவியல் மற்றும் செமிகண்டக்டர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஸ்பேஸ்ட்ரானிக்ஸ் (Spacetronics) என்ற மாநாட்டின் முதலாவது பதிப்பில் இம்மையம் ஆரம்பிக்கப்பட்டது.

## பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சைபர் குற்றங்கள் தடுப்பு இணையதளம்

- மத்திய உள்துறை அமைச்சகம் ஆட்சேபணைக்குரிய இணையதள தகவல்களை தடுப்பதற்காக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சைபர் குற்றங்கள் தடுப்பு இணையதளம் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றது.
- இந்த இணையதளம் குழந்தைகள் மீதான பாலியல் முறைகேடு சம்பந்தமான தகவல்களோடு தொடர்புடைய ஆட்சேபணைக்குரிய இணையதள தகவல்கள் மீது குடிமகன்கள் புகார்கள் செய்யும் நோக்கில் உதவும்.
- இந்த இணையதளம் வாயிலாக செய்யப்படும் புகார்கள் சம்பந்தப்பட்ட மாநில/ஒன்றியப் பிரதேசங்களின் காவல்துறை மூலம் கையாளப்படும்.

## சர்வதேச அணுசக்தி முகமையின் பாதுகாப்பு விதிகளின் கீழ் அணு உலைக் கூடங்கள்

- இந்தியா, சர்வதேச அணுசக்தி முகமையின் பாதுகாப்பு விதிகளின் கீழ் மேலும் நான்கு அணு உலைக் கூடங்களை கொண்டுவர முடிவெடுத்திருக்கின்றது.
- இம்முடிவு ஆஸ்திரியாவின் ஜெனீவாவில் நடைபெற்ற IAEA (International Atomic

Energy Agency) அமைப்பின் 62வது பொது மாநாட்டின் போது அறிவிக்கப்பட்டது.

- இந்த நான்கு அணு உலைக் கூடங்களில்
  - ரஷ்யாவில் வடிவமைக்கப்பட்ட, அழுத்தமளிக்கப்பட்ட மென்னீர் அணு உலைக் கூடம் - 2
  - இந்தியத் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட அழுத்தமளிக்கப்பட்ட கனநீர் அணுஉலைக் கூடம் - 2

  ஆகியவை அடங்கும்.
- இதன்மூலம் தற்பொழுது IAEAவின் பாதுகாப்பு விதிகளின் கீழ் மொத்தம் 26 இந்திய அணு உலைக் கூடங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

# மாநிலச் செய்திகள்

## தொழிற்சாலைகளுக்கான நட்சத்திர தரவரிசை

- ஒடிசா முதல்வர், மாசுக் குறைபாட்டை குறைப்பதற்காக மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை வலுப்படுத்த வேண்டி தொழிற்சாலைகளுக்கான நட்சத்திர தரவரிசை திட்டத்தை வெளியிட்டு இருக்கின்றார்.
- மாசு தரவரிசை நிர்ணயங்களுக்கேற்றவாறு தொழிற்சாலைகளை நட்சத்திர தரவரிசையில் ஒன்று முதல் ஐந்து வரை வரிசைப்படுத்த ஏற்படுத்தப்பட்ட அதிநவீன வெளிப்படையான நடவடிக்கை முதலாவது முறையாக இதுவேயாகும்.
- ஒடிசாவின் இத்திட்டம், இந்தியாவில் முதல்முறையாக, மிகப்பெரிய தொழிற்சாலைகளிலிருந்து வெளியிடப்படும் மாசுக்களை பற்றிய தகவல்களை உண்மை நிகழ்வலையில் கைப்பற்றி அதன்பின் அதனை தொடர்ச்சியாக கண்காணிக்க ஏற்படுத்தப்பட்ட அமைப்பாகும்.

# விளையாட்டுச் செய்திகள்

## 72வது தேசிய நீச்சல் சாம்பியன் போட்டி

- கேரளாவில் நடைபெற்ற கிளன்மார்க் (Glenmark) 72வது தேசிய நீச்சல் சாம்பியன் போட்டியில் ரிச்சா மிஸ்ராவின் திறமை 400 மீட்டர் தனிநபருக்கான பிரிவில் (Medley) சிறந்த இந்திய வீரரின் திறமையாக உருவடுத்துள்ளது.
- மிஸ்ரா அத்தூரத்தை நான்கு நிமிடங்கள் 59.17 விநாடிகளில் கடந்து, ஐந்து நிமிடங்கள் என்ற முத்திரைக்குள் சாதனையை நிகழ்த்திய முதல் இந்தியப் பெண்மணியாக உருவெடுத்துள்ளார்.




## உலக இளைஞர் மல்யுத்த சாம்பியன்ஷிப்

- அன்சு மாலிக், ரஷ்யாவின் அலினா காஜிமோபாவை வீழ்த்தி சுலோவாக்கியாவில் ரநாவா என்ற நகரில் நடைபெற்ற உலக இளைஞர் மல்யுத்தப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.
- அன்சு தன்னுடைய அரையிறுதிப் போட்டியில் ஜப்பானின் சே நந்சோ என்பவரிடம் தோல்யடையந்தார்.

- - - - - - - - - - - - - - -